30th October 1958]

Saraswathi Mahal Library, Tanjore

* 730-A *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை சரஸ்வதி மஹாலில் பழைய நூல்களைப் பரிசீலனை செய்யும் கமிட்டியில் எத்தனை பேர்கள் இருக்கின்றனர் ?

(ஆ) அவர்களுக்கு கொடுக்கப்படும் மாதவாரி சம்பளமென்ன ?

(இ) இதுவரை எத்தனை நூல்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன ?

(ஈ) இன்னும் எத்தனை நூல்கள் பரிசீலக்க வேண்டி உள்ளன ?

(உ) அவைகளில் வலங்க (கை) மத்தான் நூலை புதுப்பித்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) There is no committee specially intended for the examination of the old manuscripts in the T.M.S.S.M. Library, Tanjore. The library is managed by an administrative committee consisting of five members.

The members of the above committee are not paid any salary or allowance. Their work is entirely honorary.

(*c*) & (*d*) There are 35,000 manuscripts which have been catalogued in 28 volumes after a general examination. But a special and intensive examination is being done in respect of rare and valuable manuscripts as a result of which more than 200 manuscripts have been selected for publication. Out of these, 61 works have so far been edited and published in several languages, from 1949 onwards. It is reported that about 2,000 manuscripts have yet to be examined intensively.

(*e*) There appears to be no manuscript in the library bearing this name of dealing with any subject of this name.

SRI P. U. SHANMUGAM : அங்கே வெளியிடப்படுகிற புஸ்தகங்கள் விலை அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது. விலையைக் குறைக்க முயற்சி செய்வாரகளா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவைகளை அச்சிடுவதற்கு என்ன செலவாகிறதோ அந்த அளவுக்குத்தான் விலை அதிலே போடப்படுகிறது. இன்னும் குறைப்பது என்றால் சர்க்கார் அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

SRI A. VEDARATHNAM : இந்த சரஸ்வதி மஹாலில் உள்ள மிகப் புராதனச் சுவடிகள் பல ஜீரணமாகக் கூடிய நிலையில் இருக்கின்றன. இவற்றைப் பரிசீலனை செய்து அவைகளுக்குக் காப்பி எடுக்கவாவது அல்லது அவற்றை பிரசுரிக்காவாவது அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தான் இந்தக் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இப்போது இதைப் போன்று இருக்கக்கூடிய பழைய ஏட்டுச்சுவடிகளை காப்பி எடுப்பதற்கு முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த வலங்கமத்தான் என்ற நூல் இந்த நாட்டில் உள்ள ஆதித் திராவிட மக்களின் கலை, நாகரிகம் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றது. இது அங்கு இல்லாமலே போய்விட்டதா ? இதைப்பற்றி விவரத்தை அறிந்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விருப்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பட்டியலைப் பார்த்த வரையில் கனம் அங்கத்தினர் சொல்லுகிற புத்தகத்தின் பெயர் இல்லை. தவறான பெயரைக் கொடுத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சரஸ்வதி மஹாலில் இருந்து சில விலை உயர்ந்த மானஸ்க்ரிப்ட்டுகளை—சுதந்திரத்துக்கு முன்பே—அந்நிய நாட்டார் வாங்கி விட்டார்கள் என்ற பிரஸ்தாபம் இருந்து வருகிறதே. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி வாங்கி இருப்பார்கள் என்ற எண்ணம் இருந்தால் அதைத் திரும்பப் பெற முயற்சி எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி எந்தவிதமான தகவலும் இல்லை. நம் கையில் இருப்பதைச் சரியானபடி உபயோகத்தாலே நல்ல பயன் ஏற்படும்.

Manufacture of drugs

* 730-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே மத்திய அரசாங்கத்தாலும், ராஜ்ய அரசாங்கத்தாலும் எந்தெந்த இடங்களிலே என்னென்ன விதமான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : நாட்டு வைத்திய முறையில் நாட்டு வைத்தியர்களால் செய்யப்படும் அநேக மருந்துகள் மிகக பயன்கொடுக்கின்றன. அப்படிப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்ய அரசாங்கத்தாரால் பரிசலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நடை முறையில் மருந்து செய்வதற்கு இப்போது எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Is there any proposal to establish a factory for the manufacture of antibiotics in our State?

THE HON. SRI M. A. MANICKAVELU : No definite proposal now, Sir.

Adivasis.

* 730-C *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா கோடியக்காடு என்னும் கிராமத்திலிருக்கும் ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் ஏதேனும் உதவி செய்து வருகிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

(இ) இங்கே ஆதிவாசிகள் குடும்பங்கள் எத்தனை இருக்கின்றன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes Sir.

(*b*) A sum of Rs. 748–6–0 was spent during 1956–57 for the distribution of clothes to Seenthi Ambalagars who are Adivasis in the Kodaikkadu village.

(*c*) Forty-nine families.

SRI A. VEDARATHNAM : இந்த ஆதிவாசி குழந்தைகளுக்கு காந்தி நினைவு நிதியிலிருந்து ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தி அந்தப் பிள்ளைகளுக்கு வசதி செய்து வந்தார்கள். இந்த ஆண்டு உதவியை நிறுத்திவிடப்போவதால் அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

---

[a] Printed as Appendix VI on pages 185–189 infra